# பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாடு: விளையாட்டுக்கள் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை மையப்படுத்திய ஆய்வு

## Involvement of University Muslim Female Students in Sports- A Study Based Islamic Perspective on Sports

M.M.A. Abdullah[1], A.M.F. Sharmina[2], M.H. Suhaila[3] & S.M.M. Mazahir[4]

[1,2,3, & 4] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
abdullahmma416@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

விளையாட்டு மனிதனின் பல்துறைசார் ஆளுமை விருத்தியில் பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது. இஸ்லாம் விளையாட்டில் ஈடுபடுவதை வரவேற்கிறது. இஸ்லாத்தில் பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதும் அனுமதிக்கப்பட்டதாகும். அந்தவகையில் பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதற்காக இஸ்லாம் குறிப்பிடும் ஒழுங்குகள் மற்றும் வரையறைகளைக் கண்டறிந்து, பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாட்டை மதிப்பீடு செய்து, அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. பண்புசார் ஆய்வு வழிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மூன்றாம் வருட விடுதி மாணவிகளிடம் இருந்து வினாக்கொத்துகள் Google Forms ஊடாகப் பெறப்பட்டு MS Excel 2019 ஊடாக பகுப்பாய்வு செய்யபட்டன. அதன் கோட்பாட்டு அமைப்பைப் பெற இஸ்லாமிய மூல மற்றும் செந்நெறிகால இஸ்லாமிய இலக்கியங்கள், தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மற்றும் இணையத்தள தகவல்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விபரிப்பு முறையில் முடிவுகள் முன்வைக்கப்பட்டன. ஆய்வின் முடிவில் இஸ்லாம் பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதை அனுமதித்திருப்பதும் குறித்த பெண்கள் விளையாட்டில் ஆர்வம் கொண்டிருந்தும் பல்கலைக்கழக நுழைவின் பின்னர், சமய உளவியல், சமூக, கல்வி மற்றும் பௌதீகம் சார்ந்த பல்வேறு காரணிகளின் விளைவாக குறைவாகவே விளையாட்டில் ஈடுபாடு காட்டுகின்றமையும் கண்டறியப்பட்டது. பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாடு மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு, அவற்றுக்கான முறையான தீர்வுகள் முன்வைக்கப்பட இவ்வாய்வு உறுதுணையாக அமையவல்லது.

**திறவுச் சொற்கள் (Keywords):** முஸ்லிம் மாணவிகள், விளையாட்டு, இஸ்லாம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## Abstract

Sports has a huge influence on the development of the multidisciplinary personality of human beings. Islam appreciates participation in sports. In Islam, women are also allowed to participate in sports. Thus, the study was conducted to identify the criteria and norms that Islam prescribes for women's participation in sports, to evaluate the involvement of university Muslim female students in sports and to identify the factors influencing it. In this study which was conducted using qualitative research methodology data was collected through the questionnaires issued to 3rd year female hostel students of Faculty of Islamic Studies and Arabic Language at South Eastern University of Sri Lanka through Google Forms and analyzed through MS Excel 2019. To get its theoretical structure, secondary data such as Islamic basic sources, classical Islamic literatures, topic-related research articles, books, and internet articles were used. The data obtained was analyzed and the results were presented in descriptive manner. At the end of the study it was found that even though Islam has allowed women to play, after the entry of the university their involvement in sports is much less due to religious, psychological, social, educational, and physical factors. This study will help to identify the level of the involvement of the University Muslim female students in sports and the challenges they face and bring forward proper solutions regarding the issue.


**Keywords**: Muslim Female Students, Sports, Islam, South Eastern University of Sri Lanka

### அறிமுகம் (Introduction)

மனிதனது பல்வேறு துறைசார் திறன் விருத்திக்கு விளையாட்டு மிகவும் அவசியமான ஒரு துறையாகும். மனித வாழ்வின் வெற்றிக்குத் தேவையான குழு ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளும் சகிப்புத்தன்மை, நட்புணர்வு, உற்சாகம் போன்ற பல்வேறு நற்குணங்களின் வளர்ச்சிக்கு விளையாட்டு பெரிதும் துணை புரிகிறது (Gould & Carson, 2008). விளையாட்டு ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் அவசியமான ஒன்றாகும். இவ்விடயம் தொடர்பில் பொதுவான இணக்கப்பாடு காணப்படினும் பல சமூகங்களில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தொடர்பான செயற்பாடுகளில் இரு பாலாருக்குமான சம உரிமை உத்தரவாதப்படுத்தப்படுவதில்லை. அதாவது விளையாட்டில் பெண்களின் பங்குபற்றுதலானது தொடர்ந்தும் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே நோக்கப்படுகிறது. (Laar et al., 2019).

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைக்குமான வழிகாட்டியாக விளங்குகிறது. ஆன்மீகமும் தேக வலிமையும் இஸ்லாத்தில் வேண்டப்பட்டவையாகும். இதன் காரணமாகவே இஸ்லாம் அளவாக உண்ணுதல், தூக்கம், ஓய்வு, உடற்பயிற்சி, சுகாதாரம் போன்ற பௌதீக உயிரியல் தேவைகளுக்கான போதனைகளை வழங்கியுள்ளதோடு தினமும் இயலாமை,

சோம்பேறித்தனம், நோய், வறுமை, கடன் தொல்லை போன்றவற்றிலிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்ளும்படி வழிகாட்டுகிறது. அத்தோடு குதிரையோட்டம், நீச்சல், அம்பு எறிதல், மல்யுத்தம், ஓட்டம் போன்ற விளையாட்டுத் துறைகளில் இஸ்லாம் ஆர்வமூட்டியுள்ளதுடன் இஸ்லாத்தின் ஆரம்ப காலப் பகுதியில் இவ்விளையாட்டுத் துறைக்கான போட்டிகளும் இடம்பெற்றுள்ளன. இஸ்லாமிய கல்விக் கோட்பாடு கற்பவரின் திறன் விருத்தியை ஒரு பிரதான கல்விக்களமாக அடையாளப்படுத்தியுள்ளது. த.்.லீம், தர்பியா, த.்.தீப் போன்ற கல்விக்கான களங்களில் தர்பியா என்பது மனிதனின் ஆற்றல் விருத்தியை மையப்படுத்தியதாகும். மனிதனது தனிப்பட்ட, குடும்ப, தொழில் வாழ்வினை செவ்வனே நிறைவேற்றுவதற்காக அவற்றை பெற்றிருப்பது அவசியமாகும். ஷரீஆவின் இலட்சியங்களை (மகாசிதுஷ் ஷரீஆ) நிறைவு செய்வதற்குத் தேவையான அம்சங்களான ஆரோக்கியம், செயற்பாட்டுத் திறன், சுயகட்டுப்பாடு, விடாமுயற்சி, குறிக்கோளை மையப்படுத்தல், சமூக ஈடுபாடு, தலைமைத்துவப் பண்பு மற்றும் நேர முகாமைத்துவம் போன்ற அம்சங்களை மனிதன் பெற்றிருக்க வேண்டும். இவற்றைப் பெறுவதற்கு விளையாட்டும் உடற்பயிற்சியும் பெரிதும் உதவுகின்றன. இந்த வகையில் இஸ்லாத்தில் விளையாட்டுத்துறை முக்கியத்துவம் பெறுகின்றது (Jazeel & Kathafy, 2016).

இவ்விடயத்தில் ஆண் பெண் ஆகிய இருபாலாரும் சமமானவர்களேயாவர். எனினும் தனிநபர் மற்றும் பொதுநலன் கருதி சில விதிமுறைகளையும் ஒழுங்குகளையும் இஸ்லாம் வகுத்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. அவை முறையாக கவனிக்கப்படுமிடத்து உடல் மற்றும் உள ஆரோக்கியத்துக்கு பெரிதும் துணைபுரியும் விளையாட்டில் ஈடுபடுவதை இஸ்லாம் வரவேற்கிறது. உதாரணமாக சூதாட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுக்களை இஸ்லாம் முற்றாகத் தடை செய்துள்ளது. நவீன உலகில் பல விளையாட்டுக்களில் சூதாட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியிருப்பினும் இதனூடாக ஏற்படும் தனிமனித மற்றும் சமூகப் பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு இதனை இஸ்லாம் தடைசெய்துள்ளது. அதேபோல் குறித்த ஒரு விளையாட்டின் ஊடாக தனக்கு அல்லது பிறருக்கு காயம் அல்லது உயிராபத்து ஏற்படுமாயின் அவ்வகை விளையாட்டும் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டதாகும் (Salam Islam, 2018).

இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டே பெண்கள் விளையாட்டில் ஈடுபடும்போது அவர்களின் உடலமைப்பு மற்றும் இயற்கை அழகு என்பவற்றைக் கவனத்திற் கொண்டு அவர்களின் பாதுகாப்பையும் சமூக நலனையும் பேணும் வண்ணம் அவர்களுக்கான சில வரையறைகளும் ஒழுங்குகளும் இஸ்லாமிய அறிஞர்களின் மூலம் வகுக்கப்பட்டுள்ளன (Marwat et al., 2014). இவை பற்றிய முறையான புரிதலின்மை அல்லது எதிர்மறையான புரிதல் அல்லது இவற்றை பேணி விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கான சூழல் கிடைக்கப் பெறாமை போன்றவை முஸ்லிம் பெண்களின் விளையாட்டுடனான ஈடுபாட்டில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

இலங்கையில் பல்கலைக்கழகச் சூழலும் மாணவர்களின் பல்துறைசார் திறன் விருத்தியை வளர்த்துக் கொள்வதற்கான வளங்களைக் கொண்டமைந்த களமாகும். எனினும் இங்கு

கல்வியைத் தொடரும் முஸ்லிம் மாணவிகள் குறைவாகவே விளையாட்டுத் துறைசார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எனவே, இவ்விடயம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இப்பிரச்சினைக்கான சிறந்த தீர்வுகள் முன்வைக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

**ஆய்வுப் பிரச்சினை (Research Problem)**

இஸ்லாம் ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் விளையாட்டில் ஈடுபடுவதை அனுமதித்துள்ளது. எனினும் தனிநபர் மற்றும் சமூக நலன் கருதி பல்வேறு கட்டுப்பாடுகளையும் ஒழுங்குகளையும் இஸ்லாமிய மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய அறிஞர்கள் வகுத்துள்ளனர். கல்வி நடவடிக்கைகள் மட்டுமன்றி பல்வேறு துறைசார் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான சூழல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் காணப்பட்ட போதிலும் இங்கு கல்வி கற்கும் முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாடு மற்றும் பங்குபற்றுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதே எமது ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வு நோக்கங்கள் (Research Objectives)**

1. பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதற்காக இஸ்லாம் குறிப்பிடும் ஒழுங்குகள் மற்றும் வரையறைகளைக் கண்டறிதல்.
2. பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாட்டை மதிப்பீடு செய்து அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளப்படுத்தல்.

**ஆய்வு முறையியல் (Research Methodology)**

இவ்வாய்வானது பண்பு ரீதியிலானதாகும். இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத்தரவாக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. அத்தோடு இரண்டாம் நிலைத் தரவுகளாக இஸ்லாமிய மூல நூல்கள் மற்றும் செந்நெறிகால இஸ்லாமிய இலக்கியங்கள், தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளத் தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மூன்றாம் வருடத்தில் கல்வியைத் தொடரும் 193 விடுதி மாணவிகளில் 133 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடம் வினாக்கொத்து Google Forms ஊடாக வழங்கப்பட்டன. முழுநேரமாக பல்கலைக்கழகத்திற்குள் தரித்திருப்பதும் விளையாட்டிற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பதும் மாலை நேரங்களையும் வார இறுதி நாட்களையும் விளையாட்டிற்காகப் பயன்படுத்த அவகாசம் இருப்பதும் விடுதி மாணவிகளைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களாகும். பெறப்பட்ட தகவல்கள் MS Excel 2019 ஊடாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் வரைகலை விளக்கங்களின் துணையுடன் விபரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளும் தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

கடந்த காலங்களில் இத்தலைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கங்களை ஆய்வுக்கு உட்படுத்தியபோது விளையாட்டுத் துறையில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடு தொடர்பில் பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்றிருப்பதை அறிய முடிந்நது.

Sport Performance of Muslim Women and Different Constraints in Their Way to Participation in Sports எனும் தலைப்பில் Mohibullah Khan Marwat, Syed Zia-ul-Islam, Muhammad Waseem, Hazratullah Khattak மற்றும் Safeena BiBi என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது முஸ்லிம் பெண்களின் விளையாட்டு செயல்திறன் தொடர்பான இலக்கியங்களை மீளாய்வு செய்து விளையாட்டுடனான அவர்களின் ஈடுபாட்டுக்குத் தடையாக அமையும் காரணிகளை அடையாளப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பொதுவாக முஸ்லிம் நாடுகளில் விளையாட்டுத் துறையில் ஆண் ஆதிக்கம் நிலவுகின்றமையும் விளையாட்டு ஆண்களுக்கான செயற்பாடாகும் என்ற எண்ணம் மேலோங்கியிருக்கின்றமையும் பெண்கள் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்காமையில் சமூக, கலாசார, சமய, பொருளாதார, உடலியல் மற்றும் உளவியல் சார்ந்த பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றமையும் இவ்வாய்வின் கண்டறிதல்களாகும்.

Influence of Islam on Gender Participation in Sports among Muslim Students in Kenyan Universities எனும் தலைப்பில் Issah K. Wabuyabo, Edvin K. Wamukoya மற்றும் Hannington M. Bulinda என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது விளையாட்டில் கென்யா நாட்டின் பொதுப் பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்களின் பங்குபற்றுதல் மட்டம் மற்றும் பாலின அடிப்படையிலான அவர்களின் விளையாட்டுடனான பங்குபற்றுதலில் இஸ்லாத்தின் செல்வாக்கு என்பவற்றைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளபட்டிருந்தது. ஆய்வின் முடிவில் அம்மாணவர்களின் விளையாட்டுடனான பங்குபற்றுதலில் பாலின அடிப்படையில் பாரிய வேறுபாடு நிலவுகின்றமையும் விளையாட்டுடனான அவர்களது ஈடுபாட்டில் சமய, சமூக மற்றும் பொருளாதாரம் சார்ந்த சில காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றமையும் கண்டறியப்பட்டது.

The Perspective of Arabic Muslim Women toward Sport Participation எனும் தலைப்பில் Maesam -T- AbdulRazak, Mohd Sofian, Omar-Fauzee மற்றும் Rozita Abd-Latif என்போரால் மேற்கொள்ளபட்ட ஆய்வானது விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செயற்பாடுகள் தொடர்பான அரபு முஸ்லிம் பெண்களின் கருதுநிலையை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாய்வுக்காக பல்வேறு பின்னணிகளைக் கொண்ட 14-30 வயதுக்கு இடைப்பட்ட 15 அரபு முஸ்லிம் பெண்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டதோடு அரை-கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்களும் (Semi-Structured Questionnaire) விநியோகிக்கப்பட்டன. இளம் அரபிய முஸ்லிம் பெண்களின் இனத்துவ அடையாளங்களுக்கு அப்பால் சென்று அவர்கள் விளையாட்டில் பங்குகொள்வது மிகவும்

சவாலானதாக காணப்படுகின்றமையும் தெளிவாக இனத்துவ அடையாள வட்டத்துக்குள் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள முனையும் பெண்கள் விளையாட்டை பெண்மைக்கு கௌரவத்தைக் கொடுக்கும் ஒன்றாகக் கருதாமையினால் விளையாட்டில் ஈடுபட விரும்பாமையும் தமது இனத்துவ அடையாளங்களை சவாலாக ஏற்று விளையாட்டில் ஈடுபடும் அரபு முஸ்லிம் பெண்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றமையும் இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும்.

Participation of Pakistani Female Students in Physical Activities: Religious, Cultural, and Socioeconomic Factors எனும் தலைப்பில் Rizwan Ahmed Laar, Shusheng Shi மற்றும் Muhammad Azeem Ashraf என்போரால் மேற்கொள்ளபட்ட ஆய்வானது பாகிஸ்தானிய மாணவிகளின் உடற்பயிற்சி செயற்பாடுகளுடனான பங்குபற்றுதல் மற்றும் அதற்குத் தடையாக அமையும் காரணிகளைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாகிஸ்தானின் லர்கானா நகரைச் சேர்ந்த மாணவிகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. சமூக பொருளாதாரக் காரணிகள், சமயப் பெறுமானங்கள் மற்றும் கலாசாரம் என்பவற்றினால் மாணவிகள் உடற்பயிற்சி செயற்பாடுகளில் பங்கு கொள்வதில்லை அல்லது மிகவும் குறைவாகவே பங்கு கொள்கிறார்கள் என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும்.

Islam, Muslim Women and Sport Participation எனும் தலைப்பில் Sani Muktar Bichi என்பவரால் மேற்கொள்ளபட்ட ஆய்வானது விளையாட்டில் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், விளையாட்டில் அவர்கள் பங்கு கொள்ளுதல் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலை, அதில் பங்கு கெள்வதன் மூலம் கிடைக்கப்பெறும் பயன்கள், விளையாட்டில் பங்கு கொள்வதில் முஸ்லிம் பெண்களின் மனோநிலை, விளையாட்டுக்களில் பங்கு கொள்வதில் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள் தொடர்பிலான இஸ்லாமியக் கண்ணோட்டம் போன்றவை விரிவாக குறிப்பிடப்பட்டிருந்தன. விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடுவதைத் தூண்டுதல் மற்றும் இஸ்லாமியத் தலைவர்கள் மற்றும் போதகர்கள் இஸ்லாம் பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதை எவ்வாறு வரவேற்கிறது என்பது தொடர்பிலான போதனைகளை வழங்க வேண்டும் என்பவை ஆய்வாளரின் பிரதான பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டிருந்தன.

Sports Activities High Performance Athletes Muslim Women in Indonesia and Malaysia எனும் தலைப்பில் M. Fitri, K. Sultoni, N. Salamuddin மற்றும் Mohd Taib Harun என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது 58 மலேசிய மற்றும் 57 இந்தோனேசிய மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டில் உயர் செயற்றிறன் மிக்க முஸ்லிம் தடகள விளையாட்டு வீராங்கனைகளை அடையாளம் காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆய்வின் முடிவில் முஸ்லிம் பெண்கள் அதிகம் விரும்பும் விளையாட்டுக்களாக முறையே பூப்பந்து (Badminton), நீச்சல் மற்றும் கைப்பந்து (Volleyball) ஆகியவை காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது, முஸ்லிம் பெண்கள் அதிகம் ஈடுபாடு காட்டும்

விளையாட்டுக்களைக் கண்டறிந்து தேவைக்கேற்ப அவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சிறந்த வழிகாட்டியாக இவ்வாய்வு திகழ்கிறது.

இவ்வாய்வுகள் எமது ஆய்வின் கோட்பாட்டு அமைப்பைப் பெற பெரிதும் துணை புரிந்தன. எனினும் இலங்கைச் சூழலில் அல்லது இலங்கை பல்கலைக்கழகச் சூழலில் முஸ்லிம் மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாட்டை இஸ்லாமிய விளையாட்டுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கிறது என்ற வகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Results and Discussion)

### 1. பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதற்கான இஸ்லாமிய வரையறைகள்

இஸ்லாம், முஸ்லிம்களின் அடையாளத்தின் ஒரு அடிப்படை அம்சம் என்ற வகையில் விளையாட்டிற்கான அவர்களின் அணுகுமுறை பெரும்பாலும் மத மற்றும் கலாச்சார காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. பொதுவாக, இஸ்லாம் தேகாரோக்கியத்தையும் உடற்தகுதியையும் மனநலனையும் ஊக்குவிப்பதோடு ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பராமரிக்க உடற்பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபட ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கிறது. இருப்பினும் குறித்த விளையாட்டுகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது தொடர்பில் இஸ்லாம் பல்வேறு ஒழுங்குகளையும் வரையறைகளையும் குறிப்பிட்டுள்ளது.

விளையாட்டுக்கள் தொடர்பான இஸ்லாமிய வரையறைகளை இஸ்லாமிய ஷரீஆவின் மூலாதாரங்களின் துணைகொண்டு இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு வகுத்துள்ளனர் (Islam Question & Answer, 2008).

1. குறித்த விளையாட்டானது ஆண்களுடன் எவ்விதத்திலும் தொடர்புபடாததாகக் காணப்படல். அதாவது பயிற்றுவிப்பாளர், போட்டியாளர்கள், பார்வையாளர்கள் போன்ற விளையாட்டுடன் தொடர்புபடும் அனைவரும் பெண்களாகவே காணப்படல்.
2. (மார்க்க மற்றும் ஏனைய) கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தடையாகவோ நேரத்தை வீணடிக்கக் கூடியதாகவோ அமையப்பெறாமல் இருத்தல்.
3. விளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாததாகவும், (தேவையற்ற) சச்சரவுகள் மற்றும் பிணக்குகளுக்கு வழிவகுக்காததாகவும், உடல் உறுப்புக்களுக்கு சேதத்தை ஏற்படுத்தாததாகவும் அமையப்பெறல்.
4. அவ்ரத் (உடலில் கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய பகுதிகள்) வெளிப்படுத்தப்படுவது தவிர்க்கப்படல்.
5. சூதாட்டம் இடம்பெறாமலிருத்தல்.
6. ஆபாசமான, அல்லது வெறுக்கத்தக்க வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் செயற்பாடுகள் தவிர்க்கப்படல்.
7. வன்மத்தை வளர்க்கக் கூடியதாகவோ அல்லது வெறுப்பு, மதங்களை நிந்தனை செய்தல், மது அருந்துதல், ஆபாசமான இசை மற்றும் பாட்டுக்கள் போன்ற (இஸ்லாத்தில்) தடை செய்யப்பட்ட விடயங்களில் ஈடுபடுவதற்கு தூண்டுதலாகவோ அமையப்பெறாமலிருத்தல்.


இந்நிபந்தனைகள் பேணப்படுமிடத்து முஸ்லிம் பெண்கள் விளையாட்டுக்களில் பங்கு கொள்வதற்கான அனுமதி உண்டு என்பதே முஸ்லிம் பெண்களின் விளையாட்டு தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டமாகும்.

நபி (ஸல்) அவர்களுடன் அவரது மனைவி ஆயிஷா (ரழி) அவர்கள் ஓட்டப் போட்டியில் ஈடுபட்டமையானது (அபூ தாவூத், 2578)[49] பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதற்கான அனுமதிக்கும், இஸ்லாமிய வரலாற்றில் அவர்கள் விளையாட்டில் ஈடுபடுபட்டிருக்கின்றமைக்கான சான்றுக்குமான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கழைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீட மூன்றாம் வருட முஸ்லிம் விடுதி மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாடு மற்றும் அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பில் ஆராய்ந்த போது பின்வரும் முடிவுகள் கிடைக்கப்பெற்றன.

## 2. ஆய்வில் கலந்து கொண்ட மாணவிகளின் பின்னணி

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட விடுதி மாணவிகளின் கல்விப் பின்னணியை ஆய்வுக்கு உட்படுத்தியபோது ஆய்வில் கலந்து கொண்ட 133 மாணவிகளில் பெரும்பாலானோர் (71%) பாடசாலைப் பின்னணியைக் கொண்டிருந்தமையையும் ஏனையோர் (29%) அரபுக் கலாசாலைப் பின்னணியைக் கொண்டிருந்தமையையும் அறிய முடிந்தது. இதனை வரைபடம் 01 காண்பிக்கிறது.





**வரைபடம்: 01**

இதனூடாக இப்பீடத்தில் கல்வியைத் தொடரும் மூன்றாம் ஆண்டு மாணவிகளுள் பெரும்பாலானோர் பாடசாலைப் பின்னணியைக் கொண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. இப்பீடம் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி சார்ந்ததாக அமையப் பெற்றிருப்பினும் பொதுவாக இப்பீட மாணவர்களுள் அதிகமானோர் பாடசாலைப் பின்னணியைக் கொண்டவர்களேயாவர். இவ்வியல்பு குறித்த கல்வியாண்டு மாணவிகளிடம் காணப்படுகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

## 3. பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவது தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு தொடர்பான புரிதல்

பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவது தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு தொடர்பில் குறித்த மாணவிகளின் கருதுநிலையை ஆராய்ந்தபோது அவர்களில் 85% (113 பேர்) இவ்விடயம் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது எனவும் 13% ஆனோர் (17 பேர்) இது பற்றித் தனக்குத் தெரியாது எனவும் 1% ஆனோர் (2 பேர்) இது பற்றி இஸ்லாம் எதுவும் குறிப்பிடவில்லை எனவும் 1% ஆனோர் (1 மாணவி) தடைசெய்யப்பட்டது எனவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 02 காண்பிக்கிறது.





**வரைபடம்: 02**

இதனூடாக குறித்த மாணவிகளில் பெரும்பாலானோர் பெண்களின் விளையாட்டு தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டம் தொடர்பில் முறையான கருதுநிலையைக் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டது. எனினும் அவர்களில் கவனிக்கத்தக்க தொகையினர் (17 பேர்) இவ்விடயம் தொடர்பில் தமக்குத் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. அத்தோடு இவ்விடயம் தொடர்பில் தடைசெய்யப்பட்டது, அதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை மற்றும் தனக்குத் தெரியாது ஆகிய பதில்களைக் குறிப்பிட்ட அனைவரும் பாடசாலைப் பின்னணியைக் கொண்டவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனூடாக அரபு மத்ரஸா பின்னணியைக் கொண்ட ஆலிமாக்கள் (மௌலவியாக்கள்) அனைவரும் பாடசாலைப் பின்னணியைக் கொண்ட பெரும்பாலானோரும் விளையாட்டு தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டம் தொடர்பில் முறையான புரிதலைக் கொண்டுள்ளமையும் தெளிவாகிறது.

**4. விளையாட்டில் ஈடுபடுவதற்கான ஆர்வம்**

குறித்த மாணவர்களின் விளையாட்டுடனான விருப்பு நிலை தொடர்பில் ஆரய்ந்தபோது அவர்களில் 91% (121 பேர்) விளையாட்டில் ஈடுபாடு கொண்டிருப்பதாகவும் 09% ஆனோர் (12 பேர்) ஈடுபாடு கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 03 காண்பிக்கிறது.





**வரைபடம்: 03**

இதனூடாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவிகளில் மிகவும் அதிகமானோர் விளையாட்டில் ஈடுபடுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டது. இதனூடாக பொதுவாக விளையாட்டானது ஆண்கள் அதிகம் ஈடுபடும் செயற்பாடாகும் என்ற மனப்பாங்கு நிலவுகின்ற போதும் (Marwat et al, 2014; Bichi, 2018) பெண்களும் விளையாட்டில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றமையை அறிய முடிகிறது.

**5. பல்கலைக்கழக நுழைவிற்கு முன்னரான காலப்பகுதியில் விளையாட்டுடனான ஈடுபாடு**

குறித்த மாணவிகள் தமது பல்கலைக்கழக நுழைவிற்கு முன்னர் விளையாட்டுடன் கொண்டிருந்த தொடர்பு குறித்து ஆராய்ந்த போது அவர்களில் 86% ஆனோர் (114 பேர்) விளையாடும் பழக்கத்தைக் கொண்டிருந்ததாகவும் 14% ஆனோர் (19 பேர்) அப்பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 04 தெளிவுபடுத்துகிறது.





**வரைபடம்: 04**

இதனுடாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவிகளில் பெரும்பான்மையானோர் தமது பல்கலைக்கழக நுழைவிற்கு முன்னரே விளையாடும் பழக்கத்தைக் கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. பொதுவாக அரபு மத்ரஸாக்களில் பெண்களுக்கு விளையாடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை அல்லது விளையாட்டில் ஈடுபடுவதில்லை என்ற கருத்தபிப்பிராயம் சமூகத்தில் நிலவுகின்ற போதும் அரபு மத்ரஸா மாணவிகளில் அதிகமானோரும் விளையாட்டில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டிருப்பதானது இவ்வபிப்பிராயத்தை கேள்விக்குள்ளாக்கும் வண்ணம் அமையப் பெற்றுள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது.

### 6. பல்கலைக்கழக நுழைவின் பின்னர் விளையாட்டுடனான ஈடுபாடு

குறித்த மாணவிகளின் பல்கலைக்கழக நுழைவின் பின்னரான விளையாட்டுடனான ஈடுபாடு தொடர்பில் ஆராய்ந்தபோது அவர்களில் 96% ஆனோர் குறைந்திருப்பதாகவும் 4% ஆனோர் அதிகரித்திருப்பதாகவும் குறிப்பிட்டனர். இதனை வரைபடம் 05 தெளிவுபடுத்துகிறது.





**வரைபடம்: 05**

இதனுடாக பல்கலைக்கழக நுழைவானது மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாட்டில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது கண்டறியப்பட்டது. பல்கலைக்கழகச் சூழலில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி போன்றவற்றுக்கான பல்வேறு வசதிகளும் வளங்களும் காணப்படுகின்ற போதும் அவர்கள் அவற்றில் ஈடுபடாமையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருந்தன.

### 7. பல்கலைக்கழக நுழைவின் பின்னர் விளையாட்டுடனான ஈடுபாடு குறைவடைவதற்கான காரணிகள்

குறித்த மாணவிகளின் பல்கலைக்கழக நுழைவின் பின்னரான விளையாட்டுடனான ஈடுபாடு கணிசமான அளவு குறைவடைந்துள்ளமைக்கான காரணிகள் தொடர்பில் ஆராய்ந்த போது பல்வேறு காரணிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இக்கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகள் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பெண் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமை (72 பேர்), இஸ்லாமிய முறைப்படியான ஆடையைப் பேணி விளையாட்டில் ஈடுபடுவதில் காணப்படும் சிக்கல் (72 பேர்), ஆண்களின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றமை (68 பேர்), ஆண்களுடன் சேர்ந்து அல்லது அவர்களுக்கு முன்னிலையில்

விளையாட வேண்டியுள்ளமை (65 பேர்), ஆண்களின் விடுதிகளுக்கு அருகில் Recreation Center அமைந்துள்ளமை (57 பேர்), நேரம் போதாமை (53 பேர்), விளையாடும் இடம் விடுதியிலிருந்து அதிக தூரத்தில் அமைந்துள்ளமை (53 பேர்), விளையாட்டில் ஈடுபடுவதை பிறர் தவறாக நினைப்பார்கள் என்ற எண்ணம் (51 பேர்), சமூக வலைதளங்களில் தவறாக சித்தரிக்கப்படுகின்மை (49 பேர்), விளையாடும் பெண்களை ஏளனமாகப் பார்த்தல் (45 பேர்), சமூக அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை (38 பேர்), பல்கலைக்கழக மைதானத்தின் அமைவிடம் அசௌகரியமாகக் காணப்படுகின்றமை (38 பேர்), எதிர்பார்க்கும் விளையாட்டுக்கள் இங்கு காணப்படாமை (37 பேர்), மாவட்டவாரி அமைப்பினர் (Society) (7 பேர்), சக நண்பர்கள் (7 பேர்), சிரேஷ்ட மாணவர்கள் (Seniors) (4 பேர்) போன்ற பல்வேறு காரணிகள் அவர்களின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனை வரைபடம் 06 தெளிவுபடுத்துகிறது.




**வரைபடம்: 06**

இதனூடாக குறித்த மாணவர்கள் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு பல்வேறு காரணிகள் தடையாக இருப்பது கண்டறியப்பட்டது. அவற்றுள் இஸ்லாமிய வரையறைகள், உளவியல், சமூகம், கல்வி, பௌதீகக் காரணிகளுடன் தொடர்புபட்ட பல்வேறு தடைகள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. எனினும் குறித்த தடைகளுள் பெண் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமை, இஸ்லாமிய முறைப்படியான ஆடையைப் பேணி விளையாட்டில் ஈடுபடுவதில் காணப்படும் சிக்கல் போன்றவையே அவர்களில் பலர் விளையாட்டில் ஈடுபடாமைக்கான முதன்மைக் காரணிகளாக குறிப்பிடப்பட்டன. அதேபோல் ஆண்களின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றமை, ஆண்களுடன் சேர்ந்து அல்லது அவர்களுக்கு முன்னிலையில் விளையாட வேண்டியுள்ளமை, ஆண்களின் விடுதிகளுக்கு

அருகில் Recreation Center அமைந்துள்ளமை, நேரம் போதாமை, விளையாடும் இடம் விடுதியிலிருந்து அதிக தூரத்தில் அமைந்துள்ளமை, விளையாட்டில் ஈடுபடுவதை பிறர் தவறாக நினைப்பார்கள் என்ற எண்ணம், சமூக வலைதளங்களில் தவறாக சித்தரிக்கப்படுகின்றமை, விளையாடும் பெண்களை ஏளனமாகப் பார்த்தல், சமூக அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை, பல்கலைக்கழக மைதானத்தின் அமைவிடம் அசௌகரியமாகக் காணப்படுகின்றமை, எதிர்பார்க்கும் விளையாட்டுக்கள் இங்கு காணப்படாமை போன்ற காரணிகளும் அவர்கள் விளையாட்டில் ஈடுபடாமையில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்தியுள்ளமையும் கண்டறியப்பட்டது. அத்தோடு மாவட்டவாரி அமைப்பினர் (Society), சக நண்பர்கள், சிரேஷ்ட மாணவர்கள் (Seniors) போன்ற காரணிகள் அவர்களின் விளையாட்டுடனான ஈடுபாடு குறைவடைவதில் குறைவாகவே தாக்கம் செலுத்தியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

**முடிவுரை (Conclusion)**

இஸ்லாம் சில வரையறைகளுடன் பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதை அனுமதித்துள்ளது. எனினும் நவீன உலகில் முஸ்லிம் பெண்கள் மிகவும் குறைவாகவே விளையாட்டுத் துறையில் ஈடுபாடு காட்டுகின்றனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவிகளும் விளையாட்டில் ஈடுபடுவதற்கான ஆர்வம் காணப்பட்ட போதிலும் விளையாட்டில் மிகவும் குறைவாகவே ஈடுபாடு காட்டுகின்றனர். இஸ்லாமிய வரையறைகளுடன் தொடர்புபட்ட காரணிகள் மட்டுமன்றி உளவியல், சமூக, பௌதீக, கல்வி சார்ந்த பல்வேறு காரணிகள் குறித்த பெண்கள் விளையாட்டில் ஈடுபடாமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே, குறித்த பெண்கள் விளையாட்டில் ஈடுபடாமைக்கான காரணிகளுக்கான தீர்வுகள் முறையாக முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமிடத்து பல்கலைக்கழக மாணவிகளின் விளையாட்டுடனான ஈடுபாட்டில் பல்வேறு சாதகமான முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியும் என்பதே இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளப்பட்டது.

**பரிந்துரைகள் (Recommendations)**

- விளையாட்டின் முக்கியத்துவம் மற்றும் அதன் தேவைப்பாடு தொடர்பில் பல்கலைக்கழக மாணவிகளை விழிப்பூட்டல்.
- பல்கலைக்கழகச் சூழலில் கல்வித் துறை சார்ந்த வளங்களைப் பயன்படுத்துவதோடு இணைப்பாடவிதானங்களுடன் தொடர்புபட்ட வளங்களையும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் முன்வைக்கப்படல்.
- பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகள் தமது கலாசார விழுமியங்களையும் சமய வரையறைகளையும் பேணிய வகையில் விளையாடக் கூடிய விளையாட்டுகளை இனங்கண்டு, அவற்றை உரிய முறையில் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளை அமுல்படுத்தல்.
- இஸ்லாமிய வரையறைகளைப் பேணி தாம் தேர்ச்சி பெற்றிருக்கும் விளையாட்டுடன் தொடர்பான போட்டிகளில் கலந்துகொள்ளும்படி மாணவிகளை ஊக்குவித்தல்.
- மாணவிகளின் விளையாட்டுடன் தொடர்பான திறமைகளை வெளிக்கொணரும் வகையிலான போட்டி நிகழ்ச்சிகள் பெண்களுக்கென பிரத்தியேகமாக நடாத்தப்படல்.

- பல்கலைக்கழக உயரதிகாரிகள், உடற்கல்வித் திணைக்களம் இவ்விடயத்தில் கூடிய கரிசனை காட்டுவதோடு, பெண் மாணவிகளுக்கான பிரத்தியேக விளையாட்டுத் திடல் ஒன்றை அமைக்க முன்வருதல்.

- பல்கலைக்கழகச் சூழலில் விளையாட்டுத்துறையில் பெண்களின் திறமைகள் மற்றும் அவர்களது ஆர்வம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றை வெளிப்படுத்துவதற்காக முறையாக வளப்பகிர்வு மேற்கொள்ளப்படல்.

**உசாத்துணைகள் (References)**


Abdul Razak, M.T., Sofian, M., Fauzee, O., & Rozita, A.L. (2010). The Perspective of Arabic Muslim Women toward Sport Participation. *Journal of Asia Pacific Studies, 1*(2), 364-377. https://www.japss.org/upload/13.maesam.pdf

Bichi, S.M. (2018, May 22-25). Islam, Muslim Women and Sport Participation. Paper submitted to 2nd National Conference on *Emerging Trends in Education for Sustainable Development*, Faculty of Education, Ekiti State University, Ado Ekiti, Nigeria. https://www.researchgate.net/publication/325082337_Islam_Muslim_Women_And_Sport_Participation

Fitri, M., Sultoni, K., Salamuddin, N., & Harun, M.T. (2017). Sports Activities High Performance Athletes Muslim Women in Indonesia and Malaysia. *proceedings of IOP Conference Series: Materials Science and Engineering, 180*, 1-4. 1st Annual Applied Science and Engineering Conference (AASEC), in conjuction with The International Conference on Sport Science, Health, and Physical Education (ICSSHPE) 16–18 November 2016, Bandung, Indonesia. doi: 10.1088/1757-899X/180/1/012213

Gould, D. & Carson, S. (2008). Life Skills Development through Sport: Current Status and Future Directions. *International Review of Sport and Exercise Psychology*, *1*(1), 58-78. https://doi.org/10.1080/17509840701834573

Islam Question & Answer. (2008, May 22). *ممارسة المرأة للرياضة ، ضوابطها ، وشروطها ، ومخاطرها*. Available at ரவவிள:.'..'.ளைடயஅஙய.லைகெழ.'.யச

Jazeel, M.I.M., & Kathafy, I.M. (2016, May 16). இஸ்லாத்தில் விளையாட்டுத்துறையும் அதன் முக்கியத்துவமும் ஒரு கோட்பாட்டுரீதியிலான பார்வை. Paper presented at 3rd International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on *The Role of Islamic and Arabic Studies in the National Development*, South Eastern University

of Sri Lanka, Oluvil, Sri Lanka. Availabe at E-Repository, Main Library, SEUSL, Retrieved from http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2653

Kizar, O. (2018). The Place of Sports in the Light of Quran, Hadiths, and the Opinions of the Muslim Scholar in Islam. *Universal Journal of Educational Research*, *6*(11), 2663-2668. doi: 10.13189/ujer.2018.061132

Laar, R.L., Shi, S., & Ashraf, M.A. (2019). Participation of Pakistani Female Students in Physical Activities: Religious, Cultural, and Socioeconomic Factors. *Religions, 10*(11),617-629. https://doi.org/10.3390/rel10110617

Marwat, M.K., Zia-ul-Islam, S., Waseem, M., Khattak, H., & BiBi, S. (2014). Sport performance of Muslim women and different constraints in Their Way Participation in Sport. *International Journal of Humanities and Social Science, 4*,10(1), 208-214. http://www.ijhssnet.com/journals/Vol_4_No_10_1_August_2014/23.pdf

Nasir, B.M., Yusof, Y., Yusoff, K., Omar, A.H., Don, A.G., Abdullah, B., Hussin, M.F.A., Salamon, H., Hassan, A.M., Abdullah, A., & Baharuddin, A.S. (2016). Worldview and Behavioral Study of Sports from the Islamic Perspective among Sports Officials in Malaysia. *Mediterranean Journal of Social Sciences, 7*(1), 555-561.
னழை: 10.5901.∴.அதளள.2016.எ7ெரி555

Pfister, G. (2010). Women and Sport in Islamic countries. *Forum for Idræt 1*(1), 35-49. doi: 10.7146/ffi.v1i1.31586

Salam Islam, (2018, April 04). *Is Islam Opposed to Women's Sport?*. Retrieved from https://salamislam.com/en/articles/lifestyle-women/islam-opposed-women%E2%80%99s-sport

Wabuyabo, I.K., Wamukoya, E.K., & Bulinda, H.M. (2015). Influence of Islam on Gender Participation in Sports among Muslim Students in Kenyan universities. *Journal of Physical Education and Sport Management*, *6*(9), 82-89. doi: 10.5897/JPESM2015. 0240

Women's Sport and Fitness Foundation and Sporting Equals. (2017). *Muslim Women in Sport*. Retrieved from https://www.womeninsport.org/wp-content/uploads/2017/10/Muslim-Women-in-Sport.pdf?x99836